1975 ஏப்ரல் 1]

திரு. தொ. க. சிறைமீட்டான்: ரூ. 90,000 என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். முழுமையாக மராமத்து செய்வதற்காக மதிப்பீடு இவ்வளவு செய்யப்பட்டுள்ளதா? ஸ்பெஷல் வறட்சி நிவாரணப்பணியாக இதைச் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, அது ஒரு உத்தேச மதிப்பீடுதான். வறட்சி நிவாரணப்பணியாக ஏற்றுக்கொள்ள முடியுமா என்று பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அப்படி முடியுமானால் எடுத்துக் கொள்ளலாம்.

Family cards in Kanyakumari district

* 513 *Q*.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state whether there is any proposal under the consideration of the Government to issue family cards to those who have wet paddy lands up to an extent of 50 cents in the belt area of Kanyakumari district?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், 25 சென்டுக்குக் குறைவான நிலமுள்ளவர்களுக்கு தற்போது அரிசி வழங்கப்படுகிறது. 25 சென்டிலிருந்து 50 சென்டு வரை நிலமுள்ளவர்களுக்கு கோதுமை வழங்கப்படுகிறது.

திரு. என். டென்னிஸ்: இப்போது 25 சென்ட் நிலம் வைத்துள்ளவர்களுக்குத்தான் குடும்பக் கார்டு வழங்கப்பட்டு அரிசி வழங்கப்படுகிறது. அதிலே பல விதமான கஷ்டம் ஏற்படுகிறது. அந்த நிலங்களில் எல்லாம் பயிர் கருகி விட்டது. அதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு போதுமான அளவுக்கு அரிசி கிடைக்கவில்லை. அதோடு பல அங்கத்தினர்கள் உள்ள குடும்பங்களில் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மேலும், 50 சென்ட் நஞ்சை நிலம் வைத்துள்ளவர்களுக்கும் குடும்பக் கார்டு கொடுத்து, அரிசி வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அறுவடை காலம் சென்று, பற்றுக்குறை மாதங்களில், அப்படிப்பட்ட யோசனைகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நிறைவேற்ற விரும்புகிறார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, அங்கேயுள்ள நிலங்களில் பயிர் தீய்ந்து போய்விட்டதால், மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அப்படியிருக்கும் நிலையில் 50 சென்டிற்கு மேல் நிலம் வைத்துள்ளவர்களுக்கும், அவர்கள் நிலங்களில் ஒரு மணிநெல் விளைச்சல் இல்லை என்று சொன்னால், அரிசி கொடுக்க அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்தக் கோரிக்கை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி வைக்கப்படும்.

திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை: தலைவரவர்களே, பொதுவாகவே கன்னியாகுமரி மாவட்டத்தில் பற்றாக்குறை இருக்கிறது. அதிலே சில பகுதிகளில், ஹரிஜன மக்கள், ஏழைகள் பெருவாரியாக வாழும்பகுதிகளில், தோவாளை, அகஸ்தீஸ்வரம் போன்ற தாலுக்காக்களில், அரிசி உணவுப் பங்கீட்டு அட்டை வழங்கி அரிசி கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்தக் கேள்வி பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. செ. சதாசிவம்: தலைவரவர்களே, திருச்சி மாவட்டத்தில், அரியலூர், உடையார்பாளையம் தாலுக்காக்களில் உள்ள கிராமங்களுக்கு புஞ்சை தானியம்கூட வழங்கப்படவில்லை. உடனடியாக வழங்க உத்தரவு பிறப்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தனியாகக் கேட்க வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், பெல்ட் ஏரியாவில் இப்போது குடும்பக் கார்டு மூலமாக அரிசி விநியோகம் செய்து இருந்தாலும், சில நிறுவனங்களுக்கு, கான்வென்ட் போன்ற கல்வி நிலையங்களுக்கு கார்டு வழங்கப்படவில்லை. அவர்களுக்குக் கார்டு வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கல்வி நிலையங்களைப் பொறுத்தவரையில் அங்கு விடுதிகள் இருந்தால் உணவு வழங்க வேண்டுமென்று நாம் ஆலோசனை கூறி இருக்கிறோம். எங்காவது வழங்கவில்லை என்று தெரிவித்தால் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்லி ஏற்பாடு செய்யலாம்.